# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 6


# தீர்க்கதரிசனத்தில் தேவனுடையஇராஜ்ஜியம்




Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# தீர்க்கதரிசனத்தில் தேவனுடையஇராஜ்ஜியம்




(தரப்பட்டுள்ள அனைத்து வசனங்களையும் கண்டிப்பாக வாசிக்கவும்)

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

இப்பாடத்தில் தேவனுடைய இராஜ்யம் பற்றிப் பார்ப்போம் இராஜ்யம் என்பது என்ன, எவ்வாறு அந்த இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்? இக்கேள்விகள் எல்லாவற்றிற்கும் தேவனுடைய வசனத்தில் விடை காணலாம். ஏனெனில், இதன் சத்தியங்களை நாம் அறியவேண்டியது மிக மிக அவசியம். நமது கர்த்தரின் பிரசங்கத்தில் முதல் வார்த்தை என்னவெனில்,

**மத்தேயு 4:17-ல் 'மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது"** என்பதே யோவான் ஸ்நானகன் பிரசங்கித்த முதல் வார்த்தை என்னவெனில்,

**மத்தேயு3:1-2ல், 'மனந்திரும்புங்கள், பரலோகஇராஜ்யம் சமீபித்திருக்கிறது"** என்பதேயாகும்.

கர்த்தரின் 39 உவமைகளும் அதுபற்றியே இருக்கிறது. குறிப்பாக, **மத்தேயு 13ம்** அதிகாரத்தில் சொல்லப்பட்ட 7 உவமைகளும் **'இராஜ்யத்தின் உவமைகளே"** . சீஷர்களுக்கு ஜெபம் கற்றுத்தரும்போதுகூட,

**மத்தேயு 6:10ல், 'உம்முடைய இராஜ்யம் வருவதாக"** என்றே ஜெபிக்கச் சொன்னார்.

கர்த்தரால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷமும்கூட, **மத்தேயு 9:35ல்,'இராஜ்யத்தின் சுவிசேஷம்"** என்றழைக்கப்படுகிறது. சீஷர்கள்கூட

**மத்தேயு 10:7ல், "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது"** என்றே பிரசங்கிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது.

ஆக, இயேசுவும், அவர் சீஷர்களும் பேசிய இந்த ஒரு இராஜ்யம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமா? ஆம், கண்டிப்பாக இருக்கவேண்டும். ஏனென்றால் இந்த இராஜ்யம் எவ்வாறு, எப்போது இப்பூமியில் வரும்? என தேவன் வெளிப்படுத்தியுள்ளார்.



**தானியேல் 2**ம் அதிகாரத்தில் பாபிலோனிய இராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு வெளிப்பட்ட ஒரு கனவின் மூலமும், 7ம் அதிகாரத்தில் தானியேல் தீர்க்கதரிசிக்கு வெளியாக்கின ஒரு தரிசனத்தின்மூலமும் கர்த்தர் விளக்கியுள்ளார்.

2600 வருடங்களுக்கு முன்பே தரப்பட்ட இந்த இரு வெளிப்பாடுகள் மூலம், அவைகள் தரப்பட்ட காலமுதல் நாம் இப்போதிருக்கும் காலம்வரை எந்தெந்த இராஜ்யங்கள் இவ்வுலகை ஆளுகை செய்யும்? அதன்பின்பு தேவ இராஜ்யம் எவ்வாறு ஸ்தாபிக்கப்படும்? என அருமையான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது.


**தானியேல் 2:1 முதல் 11**ம் வசனம்வரை முழுமையாக வாசித்தறியவும்

இங்கு அக்காலத்தில் **முழு உலகத்தின் அதிபதியாகிய நேபுகாத்நேச்சார்** பயங்கரமான ஒரு கனவைப் பார்க்கிறார். அதினால் அவர் பயந்து விழித்துக்கொண்டபோது, அக்கனவை உடனடியாக மறந்துவிடுகிறார். ஆனால் , அவருக்குள் இருந்த பயத்தினால் மீண்டும் உறங்க முடியாமல் உடனடியாக சாஸ்திரிகளையும் (Magicians), ஜோதிடரையும்(நுஉொயவெநசஸ)னியக்காரரையும் (Sorcerers) மற்றும் கல்தேயரையும் (Mathematicians)அழைத்து தான் கண்ட கனவையும் அதன் அர்த்தத்தையும் சொல்லச்சொன்னபோது அவர்கள் ஒருவராலும் விளக்கமுடியவில்லை. அதினால் இராஜா கடுங்கோபங்கொண்டு, **தானியேல் 2:12**ல் பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான்.

ஆனால், தானியேலும் அவருடைய மூன்று நண்பர்களும் இளைய ஞானிகளாக இருந்ததினால் இராஜாவினிடத்தில் அச்சமயத்தில் அழைத்து வரப்படவில்லை. **தானியேல் 21:14-16** ல், ஆரியோக்கின்மூலம் தானியேல் இராஜாவின் கோபத்தை அறிந்துகொண்டபோது, சொப்பனத்தையும் அதின் விளக்கத்தையும் தெரிவிக்க கால அவகாசம் கேட்டார்.

**தானியேல் 2:17-19 -** ல் பின்பு தானியேலும் அவரின் மூன்று நண்பர்களும் (மிஷாயேல், அசரியா, அனனியா) அல்லது அவர்களின் மறுபெயர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ) தேவனிடத்தில் அச் சொப்பனத்தையும் அதின் விளக்கத்தையும் அறிவிக்க ஜெபம் செய்தபோது தானியேலுக்கு தேவன் வெளிப்படுத்தினார் என வாசிக்கிறோம்.

**தானியேல் 2: 26,30** - ல், தானியேல் இராஜாவுக்கு இச்சொப்பனத்தை விளக்கும் முன்பு



தேவனுக்கு முதலாவது மகிமை தந்து, பின் விளக்க ஆரம்பிக்கிறார்.

**தானியேல் 2:31,35** ல், முழுவதும் உலோகங்களாலானதும், பிரகாசமுமானதும் ஒரு பெரிய சிலையை இராஜா கண்டதாகவும் அதிலும் குறிப்பாக நாலு உலோகங்களாலானதும் அதாவது,

**தலை - பசும்பொன்**
**மார்பும், புயங்களும் - வெள்ளி**
**வயிறும்,தொடையும் - வெண்கலம், கால்கள்- இரும்பு**
**பாதங்களும், 10 விரல்களும் - பாதி இரும்பும், பாதி களிமண்ணும்**

இவைகளை இராஜா பார்த்துக்கொண்டிருந்தபோது கைகளால் பெயர்க்கப்படாத கல் ஒன்று பெயர்ந்து உருண்டு வந்து அந்த பெரிய சிலையை நொறுக்கிப் போட்டதுமின்றி, அந்த சிலையே இல்லாதபடிக்கு காற்று அதை அடித்துக்கொண்டு போய்விட்டது. சிலையை மோதின கல்லோவென்றால் ஒரு பெரிய பர்வதமாகி, பூமியையெல்லாம் நிரப்பிற்று. எப்பேர்ப்பட்ட சொப்பனம் அதின் பொருள் என்ன?

**தானியேல் 2:36-45** வரை முழுமையாக வாசிக்கவும்

தானியேல் தற்போது கனவை விளக்கினபின்பு, அதன் அர்த்தத்தையும் விளக்க ஆரம்பிக்கிறார்

- ⇨ சிலையின் 4 உலோகங்கள் மற்றும் அதின் பொருள் என்ன?
- ⇨ அந்த சிறிய கல் என்பது என்ன?
- ⇨ ஏன் அந்தக்கல் சிலையை நொறுக்கியது?

அன்பான சகோதர சகோதரிகளே,
இந்த 4 உலோகங்களும் உலகை ஆண்டுகொள்ளும் 4 உலகப் பேரரசுகளைக் குறிக்கும் அடையாளம். மேலும் அப்பேரரசுகள் எவை? எத்தனை வருடங்கள் இவ்வுலகை ஆண்டுகொண்டன என பின்வரும் பட்டியலில் காண்க :-

| உலோகம் | சிலையின் பாகம் | விளக்கம் | ஆண்ட வருடங்கள் |
|---|---|---|---|
| பொன் | தலை | பாபிலோனிய சாம்ராஜ்யம் | கிமு 606 - கிமு 538 (68 வருடம்) |
| வெள்ளி | மார்பும், புயமும் | மேதோ-பெர்சிய சாம்ராஜ்யம் | கிமு 538 - கிமு 331 (207 வருடம்) |
| வெண்கலம் | வயிறும் , தொடையும் | கிரேக்க சாம்ராஜ்யம் | கிமு 331 - கிமு 160 (171 வருடம்) |
| இரும்பு | கால்களும் , பாதங்களும் | ரோம சாம்ராஜ்யம் | கிமு 160 - கிமு 476 (636 வருடம்) |

பாதி இரும்பும், பாதி களிமண்ணும் எதைக்குறிக்கிறது என்றால், ரோம சாம்ராஜ்யத்தின் மற்றொரு வடிவம் அதாவது, இரும்பும் களிமண்ணும் சேர்வதுபோல ஒரு கூட்டணி சாம்ராஜ்யத்தைக் குறிக்கும்.

**இரும்பு** - ரோம சாம்ராஜ்யத்தைக் குறிக்கும்
**களிமண்** - அப்போது ரோமாபுரியில் இருந்த சபையின் கண்காணி (Bishop of Rome)யானவர் தன்னை கொஞ்சம் கொஞ்சமாக சாம்ராஜ்யத்தில் உயர்த்தி, பூமியிலே கிறிஸ்துவின் இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் (மத்தேயு 6:10) அதிகாரம் தனக்கு உண்டென்று கூறினார்

இந்த ரோம சபையானது தற்போது ஐரோப்பா என்றழைக்கப்படும் ரோம ராஜ்யத்தின் பிரிவுகளோடு சேர்ந்து, குறிப்பாக பிரான்ஸ் தேசத்தின் அப்போதைய சக்கரவர்த்திகளான பெப்பின் (Pepin) மற்றும் சார்லிமேன் (Charlemagne) என்பவர்களோடு சேர்ந்து ரோம சாம்ராஜ்யமானது, பின்பு பரிசுத்த ரோம சாம்ராஜ்யம்(Holy Roman Empire) ஆக உருமாறியது.

பாதி இரும்பும், பாதி களிமண்ணுமாகிய 10 விரல்கள் எதைக் குறிக்கிறது?
கிறிஸ்துவின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட 'இப்பரிசுத்த ரோம சாம்ராஜ்யம்" 10 தனித்தனி இராஜ்யங்களாக உருவெடுத்து, பின்பு உலகம் முழுவதையும் ஆண்டுகொண்டது. **'பிரிட்டிஷ், போர்ச்சுக்கல், பிரான்ஸ், ஸ்பெயின் ராஜ்யங்கள்**" முதலியன.

ஆக களிமண் என்பது பார்ப்பதற்கு கல்லாகத் தோன்றுவதுபோல் கிறிஸ்துவின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராஜ்யம் போலியானதாகவும், தேவனுடைய சித்தப்படி ஆனதல்ல என்பதையும் இதன்மூலம் அறியலாம்.

**தானியேல் 2:44** ல் வாசிக்கவும். ஆனால் கைகளால் பெயர்க்கப்படாத அந்தக் கல் என்ன?
உண்மையான தேவனுடைய தெய்வீக பரலோக இராஜ்யம், அதாவது மேற்சொன்ன இராஜ்யங்கள் இவ்வுலகில் ஆட்சியில் இருக்கும்போதே தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

இப்போது தானியேலுக்கு காண்பிக்கப்பட்ட தரிசனத்திற்கு செல்வோம். **தானியேல் 7:1-2** ல், இங்கே வானத்தின் 4 காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின் மேல் அடித்தது என்னவென்றால், பூமியின்மேல் 4 பெரிய தூண்களாக அரசியல், சமுதாயம், மதம், பொருளாதாரம் போன்றவற்றின்மேல் ஆவிக்குரிய அரசாட்சி நடைபெறுவதைக் குறிக்கிறது.

சமுத்திரம் எதைக்குறிக்கிறது என்றால், பாவம் மற்றும் மரணத்தில் இருக்கும் இம்முழு மனுக்குலத்தையும் குறிக்கும் **(ஏசாயா 57:20)**

காற்று அடித்தது எதைக்குறிக்கிறது என்றால் **தானியேல் 7:3** ல், ஒரு பிரச்சனையான நேரம் அல்லது உபத்திரவம் மூலம் 4 மிருகங்கள் எழும்பினது.

அந்த நான்கு மிருகங்கள் எது?
இது ஏற்கனவே தானியேல் 2ம் அதிகாரத்தில் நாம் பார்த்த 4 உலக சாம்ராஜ்யங்களே.

**தானியேல் 7:17** ல், அந்த 4 பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற 4 இராஜ்யங்களாம்.

**தானியேல் 7:4ல், ‘முந்தினது சிங்கத்தைப்போல் இருந்தது. அதற்கு கழுகின் செட்டைகள்உண்டாயிருந்தது. நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது. அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல் இரண்டு காலின் மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது. மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது”.**



இது பாபிலோனிய சாம்ராஜ்யத்தையே குறிக்கிறது.

**‘சிங்கத்தைப்போல”** - பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் பெரும் வல்லமையையும் சக்தியையும் குறிக்கிறது.

**‘கழுகின் செட்டைகள்”** - பாபிலோன் சாம்ராஜ்யம் வானளாவிற்கு உயர்ந்து நின்றதைக் குறிக்கிறது(தானியேல் 4:22)

பாபிலோன் சாம்ராஜ்யத்தின் மகிமை கழுகின் செட்டைகளுக்கு(அதாவது மிக உயரத்தில் பறக்கும் பறவை அது ஒன்றே) ஒப்பிடப்பட்டிருக்கிறது.

**‘நான் பார்த்துக்கொண்டிருக்கையில்”** - சில காலம் பின்பு

**‘அதன் இறகுகள் பிடுங்கப்பட்டது”** - நேபுகாத்நேச்சாரின் மகிமை அவரிடமிருந்து எடுக்கப்பட்டது(தானியேல் - 4:31)

**‘மனுஷ இருதயம் கொடுக்கப்பட்டது”** - நேபுகாத்நேச்சார் மிருகம்போல் 7 வருடங்கள் இருந்தார். பின்பு பரலோகத்தின் தேவனுக்கு முன்பாகத் தம்மைத் தாழ்த்தினார்(தானியேல் 4:34-37).

**தானியேல் 7:5இல்,’பின்பு கரடிக்கு ஒப்பான வேறே மிருகத்தைக் கண்டேன். அது ஒருபக்கமாய் சாய்ந்து நின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலா எலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது. எழும்பி வெகு மாம்சம் தின்னென்று அதற்கு சொல்லப்பட்டது”**



இது மேதோ - பெர்சியா சாம்ராஜ்யத்தைக் குறிக்கும்.

**‘கரடிக்கு ஒப்பான மிருகம்”** - மேதோ பெர்சியர் முற்றுகையிட்டு ஒரு பட்டணத்தை பிடிக்கும் முறையில் தேர்ந்தவர்கள். எவ்வாறு கரடி தன் இரையை அல்லது எதிரியை அணைத்து இறுக்கி கொல்கிறதோ அவ்வாறு மேதோ பெர்சியர்கள் எதிரிகளின் பட்டணத்திற்கு செல்லும் உணவு வழிகளை அடைத்து அப்பட்டணத்தை தன் வசப்படுத்துவார்கள்.

**‘ஒரு பக்கமாய் சாய்ந்து நின்றது”**- மேதோ பெர்சியர்களில், மேதியர்கள் பெர்சியர்களைக்காட்டிலும் வல்லமையில் குறைந்தவர்கள் என்பதைக் குறிக்கிறது.

**'வாயில் மூன்று விலா எலும்புகளைக் கவ்விக்கொண்டிருக்கிறது"** - மேதோ பெர்சியர்கள் இதற்கு முன் 3 முக்கிய இராஜ்யங்களுக்கு பின்பு வந்ததைக் குறிக்கிறது.

⇨ **எகிப்திய சாம்ராஜ்யம (Egyptian Kingdom)**
⇨ **லீதிய சாம்ராஜ்யம் (Lydian Kingdom)**
⇨ **பாபிலோனிய சாம்ராஜ்யம் (Banylonian Kingdom)**

**'எழும்பி வெகு மாம்சம் தின்னென்றது" -** பாபிலோனிய சாம்ராஜ்யத்தை மேதோ பெர்சியர்கள் பெற்றுக்கொள்ளவும் அந்த இராஜ்யத்தை அழிக்கவும் தேவனுடைய அதிகாரம் தரப்பட்டது**(தானி 5:38,30,31)**

**தானியேல் 7:6ல்,'அதின்பின்பு, சிறுத்தையைப் போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன். அதின் முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நான்கு இருந்தது. அந்த மிருகத்திற்கு நான்கு தலைகளும் உண்டாயிருந்தது. அதற்கு ஆளுகையும் அளிக்கப்பட்டது"**

இது கிரேக்க சாம்ராஜ்யத்தின் அடையாளம்.



**'சிறுத்தையைப்போல"** - மகா அலெக்ஸாண்டர் அதிவேக மிருகமான சிறுத்தையைப்போல இவ்வுலகை ஜெயித்ததைக் குறிக்கிறது.

**'முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நான்கு இருந்தது"** - விரைவாக உலகத்தை எவ்வாறு பிடிக்கமுடிந்தது என்றால், தன்னுடைய நான்கு முக்கியமான தளபதிகள் மூலம்.

**'நான்கு தலைகள்"** - அலெக்ஸாண்டர் தன் 32வது வயதில் மரித்தபின் வாரிசு இல்லாததால் இராஜ்யம் அந்த 4 தளபதிகளுக்கு 4 பாகமாக பிரிக்கப்பட்டு ஆளுகை செய்யப்பட்டது.

⇨ **ஜெனரல் கெசன்டர் - மாசிடோனியா கிரீஸ்**
⇨ **ஜெனரல் லிசிமேக்கஸ் - ஆசியா மைனர் திரேஸ்**
⇨ **ஜெனரல் செலுக்கஸ் நிக்கேடர் - மெசப்பத்தோமியா சிரியா**
⇨ **ஜெனரல் டாலமி - எகிப்து மற்றும் பாலஸ்தீனா**

**தானியேல் 7:7ல்,'அதற்குப்பின்பு இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன். அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது. அதற்கு பெரிய இருப்புப்பற்கள் இருந்தது. அது நொறுக்கிப் பட்சித்து மீதியானதை தன் கால்களால் மிதித்துப்போட்டது. அது தனக்குமுன் இருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது. அதற்குப் பத்துக்கொம்புகள் இருந்தது".**

இது உலகின் நான்காம் சாம்ராஜ்யமான ரோம சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது.



**'மகா பலத்ததுமாயிருந்தது"**- ரோமப் பேரரசு மற்றவற்றைவிட இராணுவ வல்லமையில் இருந்ததைக் குறிக்கிறது.

**'பெரிய இருப்புப்பற்கள்"** - என்பது யுத்த தளவாடங்கள் அனைத்தும் முழுக்க முழுக்க இரும்பால் ஆனதைக் குறிக்கிறது.

**'பத்துக்கொம்புகள்"** - என்பது ரோமப் பேரரசு பத்து பாகங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் இரு இராஜாக்கள் நியமிக்கப்பட்டனர்(தானியேல் 7:24)

உதாரணமாக - பாலஸ்தீனாவில் ஏரோது(லூக்கா 23:7, அப்போஸ்தலர் 25:13)

**'நான் கவனித்திருக்கையில்"** - ரோமப் பேரரசு நடந்துகொண்டிருக்கும் வேளையில் நடைபெறும் மற்றொரு நிகழ்ச்சி

'ஒரு சிறிய கொம்பு" - ரோமப் பேரரசிலிருந்தே உருவாகும் வேறொரு பேரரசு 'தனக்கு முன்னிருந்த மூன்று கொம்புகளையும் பிடுங்கிப்போட்டது" - என்பது பத்து இராஜ்யங்களில் மூன்றை அழித்து தான் பதவிக்கு வந்தது



**எது அல்லது யார் அந்த சின்னக்கொம்பு?**

இது ரோமப் சபையின் கண்காணியினால் (Bishop of Rome) ரோமப் பேரரசின் உதவியோடு விநோதமானமுறையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இராஜ்யம்

'மனுஷர் கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும்" - இவை வேதாகம வசனங்களின் உதவியோடு மிகவும் ஞானமாகவும் தந்திரமாகவும் ரோமப் பேரரசிற்கு மேலாக தன்னை உயர்த்த கையாண்ட முறைகள். அதில் உருவான இராஜ்யமே'பரிசுத்த ரோம சாம்ராஜ்யம்" ஆகும். ஆக, ரோம சபையின் ஒவ்வொரு கண்காணியும் ஒரு ராஜாவாக அரசியலிலும் மதத்திலும் தலைவராக கிபி 800 முதல் துவங்கப்பட்டு, ஐரோப்பாவின் எல்லா இராஜாக்களும் சபையின் கண்காணிகளுக்கு கீழ்கொண்டு வரப்பட்டனர். இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்பே சபை ஆளுகைக்கு வந்துவிட்டதாகக் கூறினர்.

**தானியேல்-7:9இல்,'நான் பார்த்துக்கொண்டிருக்கையில் நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்"**

யார் இந்த நீண்ட ஆயுசுள்ளவர்?

இது இப்பேரரசுகளின்மேல் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் பிதாவாகிய தேவனைக் குறிக்கும் அடையாளம்

**தானியேல் 7:12இல் ,'மற்ற மிருகங்களுடைய ஆளுகையோவென்றால் அவைகளைவிட்டு நீக்கப்பட்டது"**

ஆம். இப்பேரரசுகளின் இராஜ்யம் நீக்கப்பட்டு யாருக்குத் தரப்படுகிறது எனில்,



**தானியேல் 7:13ல், ‘ இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார்”**

யார் இவர்? இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. பின்பு,

**தானியேல் 7:14இல், ‘வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும், ஆளுகையும், மகத்துவமும், உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்படும்”**

இதுவே தேவனுடைய இராஜ்யம் . இந்த இராஜ்யம் இயேசுவுக்கும் அவருடைய சபையாகிய சரீரத்திற்கும் தரப்படும் . கர்த்தர் இயேசு கூறினதுபோல,

**லூக்கா 22:29 - ‘ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்”.**

ஆனால் தற்போது சபை ஆளுகிற காலம் அல்ல. மாறாக கர்த்தர் இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக மாற உண்மையுள்ளவர்களாக அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டிய காலம்**(2தீமோத் 2:12, அப்போஸ்தலர் 14:22, வெளி 3:21)**

ஆனால், அநேகர் இவ்விஷயத்தை சரியாகப் புரிந்துகொள்ளாமல், கிறிஸ்துவுக்கு முன்பாக சபை ஆளுகை செய்யும் என தவறாக எண்ணம் கொண்டுள்ளனர்.

இவ்வாறு நினைப்பது அந்த களிமண் அல்லது சின்னகொம்பு . ஆனால் தேவனுடைய ராஜ்யம் கர்த்தரின் இரண்டாம் வருகையில், அவரை உண்மையாய்ப் பின்பற்றுகிறவர்களோடு சேர்ந்து ஆரம்பிக்கும்

**மத்தேயு25:31இல், ‘மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருப்பார்”**

இது மகிமையடைந்த கிறிஸ்துவும், சபையுமே

இப்போது தானியேல் கண்ட தீர்க்கதரிசனங்களில் நாம் எங்கு இருக்கிறோம்?
இன்று உலகில் எங்கும் இராஜாக்கள் இல்லை. எல்லா சாம்ராஜ்யங்களும் மறைந்துவிட்டனவே. ஏன்? ஏனெனில் இவ்வுலகப் பேரரசுகள் முடிந்துபோன காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறதுடன், இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும் 5ம் உலகப்பேரரசின் வாசற்படியில் உள்ளோம் என்பதால் நாம் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஏன், ஒரே விஷயத்தைக் குறிக்கும், இந்த இரு சொப்பனங்களை தேவன் நேபுகாத்நேச்சாருக்கும், தானியேலுக்கும் தந்தார்? ஏனெனில், நேபுகாத்நேச்சாருக்கு அளிக்கப்பட்ட சொப்பனத்தில், மனிதருடைய பார்வையில் உலகின் இராஜ்யங்கள் விலையுயர்ந்த உலோகங்களுக்கு ஒப்பிட்டு காண்பிக்கப்பட்டது

தானியேலுக்கு தரும்போது இவ்வுலகின் இராஜ்யங்கள் தேவனுடைய பார்வையில் கொடிய மிருகங்களுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறதையும் குறிக்கிறது.

உலகில் இன்று என்னதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது?

**சங்கீதம் 110:5இல்,'உமது வலதுபாரிசத்தில் இருக்கிற ஆண்டவர் தமது கோபத்தின் நாளிலே இராஜாக்களை வெட்டுவார்"**

எல்லா இராஜ அதிகாரங்களும் தற்போது இல்லாத இக்காலத்தில் நாம் வாழ்கிறோமே. யோசிக்கவும்

**சங்கீதம் 110:6இல்,'எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார்"**

கடந்த 75 வருடங்களுக்கு முன்பாக உலகில் இம்மாதிரியான மரணங்கள் நிகழவில்லை. முதல் உலகப்போர்,இரண்டாம் உலகப்போர்,வியட்நாம் போர்,கொரியப்போர்,ஈரான்-ஈராக் போர் முதலியன. அதுமட்டுமல்ல,சுதந்திரப் போர்களுக்குப்பின் எல்லா தேசங்களிலும் உருவாகி வரும் புரட்சிகள்.

உண்மையிலேயே நாம் தேவ இராஜ்யம் துவங்கப்படும் நாட்களில் வாழ்கிறோம்.

இராஜாக்கள் ஆட்சிக்குப்பின் தேவன் அநேக வகைகளில் ஆளுகை செய்ய அனுமதித்திருந்தார். ஆனால் எல்லா அரசியல் அமைப்புகளும் சுயநலத்தினாலும்,
பேராசையினாலும் தோல்வியடைந்து வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

இராஜாக்களுக்கு அடுத்தபடியாக,


**கம்யூனிசம்** - ரஷ்யா இன்று எத்தனை துண்டுகளாகிவிட்டது

**சோஷலிசம்** - உலகின் இன்று உபயோகமில்லாததாக ஆகி வருகிறது

**ஜனநாயகம்** - உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம்.

ஆனால் எந்தவொரு பிரச்சனையும் தீர்வதாக இல்லை. தீர்க்கதரிசனமாக,





**ஆமோஸ் 5:19ல், 'சிங்கத்துக்குத் தப்பினவன் கரடிக்கு எதிர்ப்பட்டதுபோலும்,கரடிக்குத் தப்பினவன், வீட்டின்மேல் கையை வைக்கும்போது பாம்பு கடித்ததுபோலும் இருக்கும்"**





**சிங்கம் - பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்**

**கரடி - ரஷ்யாவில் இருந்த கம்யூனிசம்**

**வீடு - ஜனநாயகம்∴ மக்கள் ஆட்சி**

**வீட்டின்மேல் கையை வைத்தல்-பாதுகாப்பாக இருக்கும் என நம்புவது**

**பாம்பு கடித்தல் - ஜனநாயகம்கூட தோல்வியடைந்து வருகிறது**


ஆக எல்லா வகையான அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு

**‘தேவனுடைய இராஜ்யமே”**

**ஆகாய் 2:7ல்,’ சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்”**

ஆக தேவனுடைய மகிமையான இராஜ்யம் பற்றிய சத்தியங்களை நாம் பார்த்தோம்.

தேவன் தாமே அவர் சத்தத்தைக் கேட்கவும், அவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும் உங்களுக்கு உதவிபுரிவாராக.




**தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்!**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**

For Further Details Please Contact:

bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky

+919443321874 https://www.facebook.com/bibleresearch/